Ontario

*செய்திகள்*

**நிதி அமைச்சு**

## வாகனக் காப்புறுதி விலையை ஒன்டாரியோ சாரதிகளுக்கு மலிவாக்குதல்

*மாகாண இலக்கு 15 வீத சராசரி விலை குறைப்பாகும்*

**செய்திகள்** ஆகஸ்ட் 23, 2013

வாகனக் காப்புறுதி செலவு மற்றும் விலைக்குறைப்புத் திட்டத்தின் மூலம் நுகர்வோரைப் பாதுகாக்கவும் வாகனக் காப்புறுதியில் பணத்தைச் சேமிப்பதற்குமான நடவடிக்கையை ஒன்டாரியோ எடுக்கின்றது.

அடுத்த இரண்டு வருடங்களில், சராசரி 15 விகித வாகனக் காப்புறுதி விலைக் குறைப்பை தனது இலக்காக ஒன்டாரியோ கொண்டுள்ளது — ஆகஸ்ட் 2014 இல் சராசரி எட்டு வீதக் குறைப்பை இது உள்ளடக்கும். இந்தக் குறைப்புகளை பின்வரும் வழிகள் மூலம் மாகாணம் சாத்தியமாக்கும் :

- காப்புறுதி வழங்குபவர்கள் விலைகளை மீழ்-கோப்பு (ரீ-ஃபைல்) செய்யும்படி கேட்பதற்கான அதிகாரத்தை நிதிச் சேவைகள் மேலதிகாரிக்கு வழங்குதல்
- வாகனக் காப்புறுதி நிறுவனங்களுக்கு விலைச்சீட்டு (இன்வொய்ஸ்) வழங்கும் உடல்நல கிளினிக்குகளுக்கு உரிமம் வழங்குதல் உட்பட மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்
- விபத்து நன்மைகள்பற்றிய மேலதிகாரியின் வழிமுறைகளை செல்லுபடியாக்குவதன் மூலம் எதிர்பாராச் செலவுகளைக் குறைத்தல்
- வாகன இழுப்பு (டோவிங்) துறை மீதான மாகாணக் கண்காணிப்பு மற்றும் வாகன மோதல் திருத்தவேலை பழக்கங்கள் உட்பட வேறு விலைக்குறைப்பு வழிகளை ஆராய்தல்
- பாதுகாப்பான ஓட்டுனர் சரித்திரம் உள்ளவர்களுக்கு தள்ளுபடிகளை வழங்கும்படி காப்புறுதி வழங்குவோரை தொடர்ந்து தேவைப்படுத்தல்
- ஒன்டாரியோவின் சகல பிராந்தியங்களும் இந்தச் சேமிப்புகளின் மூலம் பயனடைவதை உறுதிசெய்தல்

15 விகித சராசரி விலைக் குறைப்பு இலக்கை அடைய தேவைப்படும் மேலதிக நடவடிக்கையையும் மற்றும் எல்லா அத்தியாவசிய படிகளையும் அரசாங்கம் எடுத்திடும்.

இந்த நடவடிக்கைகள், வாகனக் காப்புறுதி விலைகளை நல் நிலைப்படுத்திய முன்னிருந்த சீர்திருத்தங்கள்மீது கட்டியெழுப்பப்படுகின்றன. ஒன்டாரியோவின் தொண்ணூறு லட்சம் (ஒன்பது மில்லியன்) சாரதிகளுக்கு, நியாயமான குறைந்த விலையில் வாகனக் காப்புறுதித் திட்டத்தை கிடைக்கப்பெறச் செய்வதற்கும், மக்களின் அன்றாட வாழ்வில் உதவுவதற்குமான அரசாங்கத்தின் திட்டம் இதுவாகும்.

### மேற்கோள்கள்

"நுகர்வோரைப் பாதுகாக்கவும், வாகனக் காப்புறுதியில் அவர்கள் பணத்தைச் சேமிக்கவும் உதவுவதற்கு அரசாங்கமானது நடைமுறையான திட்டமொன்றைக் கொண்டுள்ளது. இந்தத் துறையில் செலவைக் குறைப்பதற்கு நாங்கள் கடினமாக உழைத்திருப்பதோடு, அந்த சேமிப்புக்கள் நுகர்வோரைச் சென்றடைவதை உறுதிசெய்யும் பொருட்டு தொடர்ந்தும் மேலதிக நடவடிக்கைகளை எடுத்துவருகிறோம்."

— Charles Sousa, நிதியமைச்சர் (Minister of Finance)

## துரித உண்மைகள்

- மேலதிக வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையை உறுதிசெய்ய, சேமிப்புக்கள் எவ்வளவு துரிதமாக நுகர்வோரைச் சென்றடைகின்றன மற்றும் அவர்களுக்கு மலிந்த விலையில்  கட்டணங்களை வழங்குவதில் இந்தத் துறையின் செயல்திறன் என்ன என்பதுபற்றிய அறிக்கையை சுயாதீனமான நிபுணர்கள் வழங்குவார்கள்.
- வாகனக் காப்புறுதிச் செலவு மற்றும் விலைக்குறைப்புத் திட்டமானது ஒன்டாரியோவின் 2013 ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தின் ஒரு பாகமாக அறிமுகம் செய்யப்பட்டது.
- அமல்ப்படுத்தப்படும் இந்த திட்டங்கள் மூலம், ஜனவரி 2014 இல், ஒன்டாரியோவின் நிதிச் சேவைகள் ஆணையகத்தின் அறிக்கை, மூன்று தொடங்கி ஐந்து சதவிகதம் வரையிலான அங்கீகரிக்கப்பட்ட விலைக் குறைப்பை காட்டுமென அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.
- வின்டர் டயர்களைக் கொண்டிருத்தல், அங்கீகரிக்கப்பட்ட சாரதிப் பயிற்சித் திட்டம் ஒன்றைப் பூர்த்திசெய்திருத்தல், வீட்டு மற்றும் வாகனக் காப்புறுதியை ஒன்று சேர்த்தல், மற்றும் எல்லா வாகனங்களையும் ஒரே நிறுவனத்தில் காப்புறுதிசெய்தல் ஆகியவற்றிற்கு தள்ளுபடிகள் கிடைக்கக்கூடுமென்பதால், பல நிறுவனங்களை அணுகுதல் மற்றும் தங்கள் நிறுவனங்களுடன் காப்புறுதிக் கொள்கைகளை மறுபார்வை செய்தல் ஆகியவற்றின் மூலம் மேலும் விலைகளைக் குறைப்பது பற்றிய வழிகளைக் கண்டடையும்படி நுகர்வோர் ஊக்குவிக்கப்படுகின்றனர்.
- வாகனக் காப்புறுதி செலவு மற்றும் விலைக்குறைப்புத் திட்டத்துடன் சேர்த்து, ஒன்டாரியோவின் வாகனக் காப்புறுதி சர்ச்சைத் தீர்வு முறை மீதான ஒரு மீழ்பார்வையை தலைமைதாங்கவும் தற்போதைய முறையை சீர்திருத்துவதற்கான சிபாரிசுகளை வழங்குவதற்காகவும் மான்புமிகு ஜெ. டக்ளஸ் கண்ணிங்ஹாம் நியமிக்கப்பட்டுள்ளார்

## மேலும் அறிந்துகொள்ளுங்கள்

ஒன்டாரியோவின் வாகனக் காப்புறுதிச் சரித்திரத்தை அறிந்துகொள்ளுங்கள்.

வாகனக் காப்புறுதி விலை ஒன்டாரியோவில் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

காப்புறுதி வாங்கும்பொழுது பணத்தைச் சேமித்திட இந்தக் குறிப்புகளைப் பயன்படுத்துங்கள்.

ஒன்டாரியோவின் காலாண்டு விலைபற்றிய தகவல்களை வாசிக்கவும்.

மான்புமிகு J. Douglas Cunningham ஐப்பற்றி வாசிக்கவும்.

---

**ஊடக விசாரிப்புகளுக்கு மட்டும்:**
Andrew Chornenky, அமைச்சரின் அலுவலகம், (Minister’s Office) 416-325-8679
Marc Pichette, நிதி அமைச்சு(Ministry of Finance) 416-314-1587

**பொதுசன விசாரிப்புகளுக்கு 1-800-337-7222**
(ஒன்டாரியோவில் மட்டும் இலவசம்)